**OS.No.21/2023, Dated 05.02.2026**

The witness sworn under Oaths Act 1969 on this the 05th day of February 2026.

**பி.வா.சா.2 – சந்திரகேசன் த/பெ குப்பன் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் ஆணைபோகி கிராமத்தை சேர்ந்தவர் ஆவேன். எனக்கு வாதி பிரதிவாதிகளை தெரியும். ராமகிருஷ்ண நாயுடு ஊரில் உள்ள நபர்களுக்கு கடன் கொடுக்கும் வழக்கத்தில் இருந்தார் என்றால் சரிதான். நான் ராமகிருஷ்ண நாயுடுவிடம் கடன் வாங்கி திருப்ப கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. எனக்கு எழுதப்படிக்க தெரியும். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். ராமகிருஷ்ண நாயுடு அழைத்ததன் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதிகள் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் கிணறுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். கிணறு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று எனக்கு தெரியாது. வாதிகளின் சர்வே எண்ணும் எனக்கு தெரியாது. பிரதிவாதிகளின் சர்வே எண்ணும் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் புல்டோசர் வைத்து தாவா கிணற்றை இடிக்க வந்தது தான் பிரச்சனையா என்றால் அவ்வாறு இடிக்க வரவில்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சுப்பிரமணி தனது இடத்தை அளப்பதற்கு எப்போது படி கட்டினார் என்று எனக்கு தெரியாது. 2013 ஆம் ஆண்டு ராமகிருஷ்ண நாயுடு அளந்தார், தேதி மாதம் தெரியாது. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் ராமகிருஷ்ண நாயுடு இடத்தில் கிணறு வருவதாக நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகளின் இடத்தில் மட்டும் தான் கிணறு உள்ளது என்றால் சரியல்ல. 2013 ஆம் ஆண்டு சர்வேயர் அறிக்கையில் 1ம் வாதி கையெழுத்து போட மறுத்துவிட்டதாக நான் குறிப்பிட்டுள்ளேன். நான் இதுவரை வேறு

வழக்குகளில் சாட்சியம் அளித்ததில்லை. வழக்கில் சம்பந்தப்பட்ட பிரச்சனை குறித்து எனக்கு எதுவுமே தெரியாது என்றால் சரியல்ல. நான் அளக்கும்போது உடனிருந்தேன். நானும் ராமகிருஷ்ண நாயுடுவும் நண்பர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் தான் தாவா கிணற்றை அனுபவித்து என்றாலும் 1ம் பிரதிவாதி தான் அது குறித்து தற்சமயம் பிரச்சனை செய்கிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.05 18:30:41 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி